2013 ஏப்ரல் 10]

207—

இராஜகோபுரம்

***617—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் அருள்மிகு வனபத்ரகாளி அம்மன் கோயிலுக்கு இராஜகோபுரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளி அம்மன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயில், உதவி ஆணையர் நிலை செயல் அலுவலர் அவர்களாலும், பரம்பரை அறங்காவலர் ஒருவராலும் நிருவாகம் செய்யப்பட்டு வருகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி, இத்திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் ஏழு நிலை இராஜகோபுரம் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள இந்து சமய அறநிலையத் துறையின் ஸ்தபதியால் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, விரிவான பெருந்திட்ட வரைவு தயாரிக்கப்பட்டு, அரசின் பரிசீலனையில் உள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான அனுமதியுடன், ஏழு நிலை இராஜகோபுரம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் விரைவில் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுதினமும் இரந்துண்டு வாழ்பவர்களுக்கெல்லாம், நிரந்தரமாக இன்னமுது படைத்து பசியாற்றும் இயற்கை உள்ளம் கொண்ட எங்களது புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறேன்.

மேட்டுப்பாளையம் தொகுதி, பவானி ஆற்றங்கரை ஓரத்தில், இயற்கை வளம் வாய்ந்த சூழலில் அருள்மிகு வனபத்ரகாளி அம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. இந்தத் திருக்கோயில் பிரசித்தி பெற்ற ஒரு திருக்கோயிலாகும். 15 ஏக்கர் அளவில் இருக்கிற இந்தத் திருக்கோயிலின் பெரும்பாலான பகுதிகளில் வளர்ச்சிப் பணியாக சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டிருக்கிறது. திருக்கோயில் திருப்பணிகளும் அதிகமான அளவில் நடைபெற்று முடிந்திருக்கின்றன. இந்தத் திருக்கோயிலுக்கு வைப்பு நிதியாக இன்று சுமார் 20 கோடி அளவிலே நிதியும் உள்ளது. கடந்த காலத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு, வணிக வளாகம், பொங்கல் மண்டபம், பக்தர்கள் தங்கும் விடுதி, நவீன கழிப்பறை, உணவு அருந்தும் மண்டபம், குடிநீர் மேல்நிலைத் தொட்டி, வடிகால் அமைக்கும் திட்டம் என பல்வேறு திட்டங்கள் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இதுதவிர, தற்பொழுது பேருந்து நிலையம் கட்டுகிற பணியும், திருக்கோயிலுக்கு அலுவலகம் கட்டுகிற பணியும், வழிபாட்டுத் தலமும், பாதுகாப்பு வளையமும், உட்பிரகார மண்டபம் கட்டுகிற பணிகளும் நடந்து வருகின்றன. இதுதவிர, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அங்கு பணிபுரியும் பணியாளர்களுக்கு இருப்பிடம் கட்டுவதற்கும், அங்கு இயங்கி வரும் கருணை இல்லத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கும் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பணிகளும் வெகுவிரைவில் நடைபெற இருக்கின்றன. மேலும், இத்திருக்கோயிலுக்கு முத்தாய்ப்பாக இராஜகோபுரம் 2 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும் என்று இன்று அறிவித்திருக்கின்ற தாயுள்ளம் கொண்ட, மனித நேயம் படைத்த (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து, என் சார்பாகவும், திருக்கோயிலுக்கு வந்து செல்கின்ற இலட்சக்கணக்கான பக்தர்கள் சார்பாகவும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும், கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள்வாயிலாக நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

2013 ஏப்ரல் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. சுப்பையா அவர்கள்.*

திரு. இ. சுப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிர நாட்டல்
அன்னை யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல்"

என்றார் மகாகவி பாரதியார். ஆனால், அன்னச் சத்திரங்களும் அமைத்து, ஆலயங்களையும் சிறக்க வைத்து, ஏழைகளுக்கும் உலகத் தரக் கல்வியை உவகையோடு அளித்து, கல்லாமையும், இல்லாமையும் இல்லாத மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை உருவாக்கி, தாய் நாட்டில் தமிழகமே தலையாய மாநிலம் என்னும் வரலாற்றுப் புரட்சி படைப்பதற்காக,

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. இ. சுப்பையா: *உண்ணாது உழைத்து, உறங்காது விழித்து, இந்த மண்ணாளும் தாயே, எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா, உங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். அம்பாசமுத்திரம் தொகுதியில் ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட முற்கால பாண்டியரால் கட்டப்பட்ட மரகதாம்பிகை சமேத காசிநாத சுவாமி திருக்கோயில் இராஜகோபுரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டு அமர்கிறேன், நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து கோயில்களும் இன்றைக்குப் புனரமைக்கப்பட்டு, குடமுழுக்கு*

நடத்தப்பட்டு வரும் இந்த வேளையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற இராஜகோபுரத்திற்கு, அந்தக் கோயிலினுடைய நிதி ஆதாரத்தைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், உபயதாரர்கள் முன்வருவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழிவகை செய்வார்களானால், அதனை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

208—

வருவாய் ஆய்வாளர் அலுவலகம்

***6962—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்கு மானியக் கோரிக்கை எண் 41 மற்றும் 51–ன்மீது நடைபெற்ற விவாதத்திற்கான பதிலுரையில் சட்டமன்றப் பேரவையில் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளதினுடைய அடிப்படையில், நாகப்பட்டினம்